# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.** யோவான் 1:9

**மன்னா – 11 டிசம்பர் 2021 பிரதி – 9**

*I am not worthy of the least of all the steadfast love and all the faithfulness which thou hast shown to thy servant, for with only my staff I crossed this Jordan; and now I have become two companies. - Genesis 32:10*

Church of South India


**Kanyakumari Diocese**

*C. S. I. Diocesan Office, 71-A, Dennis Street, Nagercoil – 629 001, South India*

Rt. Rev. Dr. A. R. Chelliah,
M. A., B.D., M.Th., D. Min.
*Bishop*
Off. : 04652 – 231539, 220789, 233328
Fax : 04652 – 226560
Email : csikkd@bsnl.in

04 November 2021

## ஆசியுரை



"மான்கள் நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" சங் : 42 :1

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியர் திருப்பெயரில் தென்னிந்தியத் திருச்சபை கன்னியாகுமரிப் பேராயத்தின் சார்பில் ஓமன் தமிழ்த் திருச்சபை அவயவங்களை வாழ்த்துகிறேன்.

நமது திருச்சபை அளவில் வெளியிடப்படும் இதழான "பாலைவன மன்னா" வழி முதலாவது தொடர்பு கொள்வதில் மகிழ்சியடைகின்றேன். சமீபத்துக்கு மட்டுமல்ல, தூரத்திற்கும் சமீபமாக இருந்து நம்மை கண்மணி போல பாதுகாத்து வருகின்ற கடவுளை போற்றுகின்றேன்.

கடந்த 20 மாதங்களாக இயல்பு நிலைக்கு விஞ்சிய அளவில் தொற்று நோயின் தாக்கத்தால் பாதிப்புகள் பல நிலையில் வந்தாலும், நம்மில் பலரை இழந்தாலும், அவரது கருணையால் நம்மை தப்புவித்த கடவுள் இன்னும் தப்புவிப்பார் என்ற நம்பிக்கையோடும், ஜெபத்தோடும் முன்னேற்றம் காண அருள் செய்வார்.

இறைமக்களாக, இறைசித்தம் செய்ய, தாங்களுக்கு திருப்பணி செய்ய அனுப்பப்பட்டுள்ள குருவானவர் போவாஸ் அவர்களையும், அவர் தம் குடும்பத்தையும் கடவுளின் நல்ல பணிக்கு பயன்படுத்த ஜெபியுங்கள். ஆதரவு காட்டுங்கள். நீண்ட வருட ஜெபத்தாலும், பிரயாசத்தாலும் குருவானவர் விசா (Priest VISA) கிடைக்க கடவுள் கிருபை செய்தார். அதற்கு உறுதுணையாய் நின்று உதவி செய்த குருவானவர் ஜோஸ்வா போட் அவர்களுக்கு பேராயத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன். அவருக்கு நன்றிக் கடிதம் ஒன்று உங்கள் அனைவர் சார்பில் அனுப்பியுள்ளேன். மேலும் நமது கன்னியாகுமரிப் பேராயத்திற்கு வருகை தர உங்கள் சார்பில் அழைத்துள்ளேன். மிக அன்போடு நமது சபையினை நேசிக்கின்ற ஓர் உத்தம குருவானவர்.

பேராயத்தின் திருப்பணிகளை மிக ஜெபத்தோடு, நேர்மையோடு நிறைவேற்ற கடவுளிடம் ஜெபிப்போம். பேராய மலைநாட்டு திருப்பணிகளுக்கு ஓமன் சபையாக உதவிட வழிமுறைகளை தேடும்போது உதவிடுங்கள். நெய்யூர் மருத்துவ மிஷன் ஆரம்பித்து 182 வருடங்கள் முடிந்துள்ளது. கடந்த 2016 வது வருடம் ஆரம்பித்த மருத்துவக் கல்லூரியின் ஒப்புதல் அரசின் வழி பெற்றுக்கொள்ள வேகமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதற்காக ஜெபியுங்கள். வருகின்ற 14 -ம் தேதி 10 சகோதரர்களுக்கு மார்த்தாண்டம் ஆலயத்தில் வைத்து அருட்பொழிவு (Ordination) கொடுக்கப்பட உள்ளது. அதற்காக ஜெபியுங்கள். விடுமுறை நாட்களில் இங்கு வரும்போது என்னை சந்திக்க விரும்பினால் தொடர்பு கொள்ளுங்கள். வருகின்ற கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு பண்டிகை நாட்கள் மிக ஆசீர்வாதமாய் அமைய வாழ்த்துகிறேன்.

உங்கள் அனைவரையும் ஜெபத்தோடு வாழ்த்தி ஆசீர்வதிக்கும்

பேராயர்



# ஆயர் மடல்



அன்பர்களே!

விண்ணை துறந்து மண்ணில் பிறந்து மனுக்குலத்தின் மாசு, இருள் நீக்கி பேரொளி தந்து வழிநடத்தும் இறைமகன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

C.S.I ஓமான் தமிழ் திருச்சபையின் இறைமக்களாகிய உங்களோடு இணைந்து இறைப்பணி செய்ய அருள்புரிந்த ஆண்டவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். இந்த நல்வாய்ப்பை கொடுத்த கன்னியாகுமரி பேராயத்தின் கண்ணியத்துக்குரிய பேராயர் அவர்களுக்கும், பேராய பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி. திருச்சபையின் செயலர், பொருளாளர், கணக்கர், ஏனைய சபைக்குழு அங்கத்தினர்களுக்கும், கிளை சங்கங்களின் பொறுப்பாளர்கள், அங்கத்தினர்கள், சபைமக்கள் அனைவருக்கும் நன்றி.

Priest Visa கிடைப்பது மகிழ்ச்சியானது. இதற்கு சுமார் 17 ஆண்டுகளாக பல முயற்சிகளை மேற்கொண்ட முன்னாள் போதகர்கள், அவரோடு இணைந்து செயல்பட்ட எல்லா சபைக்குழு அங்கத்தினர்களுக்கும், இதற்காக ஜெபித்த சபையின் அனைத்து விசுவாசிகளுக்கும் நன்றி.

PCO-வின் தலைமை போதகர் Rev. ஜோஷ்வா போர்டு, PCO Council Chairman, PCO Secretary, முன்னாள் PCO Council Chairman, முன்னாள் Finance Chairman ஆகியோருக்கும் நன்றி.

கொடிய 'வைரஸ்' பரவாமல் இருக்கவும், அனைத்து மக்களின் பாதுகாப்பிற்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

பாலகனாய் பிறந்த இயேசு நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பிறக்க இடம் கொடுப்போம். இதயத்தை தூய்மையின் பிறப்பிடமாக்கி நல்லதை செய்ய முயல்வோம். நல்லதை பேசி, நன்மைகள் பல செய்து, புதுமைகள் பல புத்தாண்டில் படைப்போம்.

பண்டிகை நாட்களில் மகிழ்ச்சியும், சமாதானமும் மனிதரிடையே உறவாட இணைந்து செயல்படுவோம். இறையாசி என்றும் நம் அனைவரோடும் இருப்பதாக! உங்களுக்கு எமது கிறிஸ்து பிறப்பு மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

**அன்புடன் போதகர்,**

**Rev. S. போவாஸ்**

# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

மண்ணை மீட்க மானிடனாய் பிறந்த மன்னவனாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.




நம் தேவாதி தேவன் ஏழ்மை கோலம் எடுத்து இந்த உலகத்தில் மனிதனாய் அவதரித்த இந்த நாளை நாம் நினைவுக்கூறுவோம். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தேவன் ஏழை மனிதனாய் பிறந்த நாள், உலக சரித்திரத்தை மாற்றிய நாள், இரட்சிப்பையும், ஆசீர்வாதத்தையும் கொண்டு வந்த நாள், "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). கடவுளுடைய அன்புகூருதல் அவருடைய குமாரன் மூலமாக வெளிப்பட்டது. அவ்வாறு நம்முடைய அன்புகூருதல் நமது செயல்கள் மூலம் வெளிப்பட வேண்டும் என்பதேயே கிறிஸ்து நம்மில் எதிர்பார்க்கிறார்.

நம் திருச்சபைக்கு வர இருக்கும் புதிய போதகர் Rev. S. Bovas தலைமையில் நம் திருச்சபை சிறப்பாக வழிநடத்தப்பட கர்த்தர் கிருபை செய்வாராக. இறைமக்கள் இம்மட்டும் தந்து வரும் அனைத்து ஆதரவுகளுக்கும், பங்களிப்புகளுக்கும், ஆலோசனைகளுக்கும் நன்றி. புதிய ஆண்டிலும் அனைத்து ஒத்துழைப்பும் தர சபைகமிட்டி சார்பாக அன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.


**கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

**சபை கமிட்டி சார்பில்,**

**சபை செயலர்**
**சுஜித் கிளாட்சன்**

## அருளுரை

# உன்னத ஒளி




"உலகை சந்தித்த உன்னத ஒளி" என்னும் கருப்பொருளில் சிந்திப்போம். (யோவான் 1:9).

தாமஸ் ஆல்வா எடிசன் 999 முறை முயன்று முயற்ச்சியை கைவிட்டு விடாமல் இரவு நேரத்தில் மெழுகுவர்த்தியை வைத்துக் கொண்டு கடின முயற்ச்சிக்கு பிறகு 1000-வது முறையாக முயன்று மின் விளக்கின் வெளிச்சத்தை கண்டு பிடிக்கின்றார். தான் மின் விளக்கின் ஒளியை கண்டு பிடித்த மகிழ்ச்சியை யாரிடமாவது சொல்லி மகிழ வேண்டும் என நினைத்தவர் அருகில் உறங்கி கொண்டிருக்கும் அன்பு மனைவியை எழுப்பி "நான் மின் விளக்கு ஒளி தரும் விதத்தை கண்டுபிடித்து விட்டேன்" என்றாராம். அதற்கு அவர் மனைவி ஆமாம் இது ரொம்ப முக்கியம் இப்போது மின் விளக்கை அணைத்து விட்டு தூங்குங்கள் என்று கூறினாராம். ஒளியின் மகிமையை அவரின் மனைவி புரிந்து கொள்ளவில்லை.




கடவுள் உலகை படைத்தபோது ஆழத்தின் மீது இருள் பரவி இருந்த நிலையில் 'ஒளி' தோன்றுக என்றார் (ஆதி 1:3). ஒளியே முதலாவதாக படைக்கப்பட்டது. அது படைப்போடு மட்டும் நின்றுவிடாமல் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வருகிறது. பகலை ஆள சூரியனையும், இரவை ஆள சந்திர விண்மீன்களையும் படைத்த கடவுள் அவற்றை ஒரு சாட்சியமாக நமக்கு முன் வைத்துள்ளார்.

எங்கே நிம்மதி! எங்கே நிம்மதி! அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்று மனுக்குலம் ஏங்குகிறது. மனிதன் மன அமைதிக்காக அங்கும் இங்கும் ஓடி அலைகிறான். மனிதன் விரும்பும் உண்மையான அமைதியை, சமாதானத்தை சந்தோஷத்தை அருளவே இயேசு கிறிஸ்து இருள் நிறைந்த பூமியில் ஒளியாக பிறந்தார். உன்னத ஒளியாம் இயேசு நம் வாழ்வில் எவ்வாறு செயல்படுகிறார் என சிந்திப்போம்.

## 1. பாவ இருளை அகற்றும் ஒளி....

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயா என்ற இறைவாக்கினர் இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தார். இருளில் நடக்கிற

ஜனங்கள் பெரிய ஒளியை கண்டார்கள் (ஏசாயா 9:2). கடவுள் தம் மக்களை பாவம் என்னும் இருளில் இருந்தும், அடிமை வாழ்விலிருந்தும் விடுவிக்க தொடக்க காலம் முதல் பல இறைவாக்கினர்கள் வழியாக முயற்ச்சித்தார். இஸ்ரவேல் மக்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள். ஆனால் பாவம் என்னும் போக்கில் வாழ்ந்த அவர்கள் விடுதலையை எதிர்பார்த்தவர்களாக வாழ்ந்தார்கள். மேலும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு அடிமைகளாக வாழ்ந்தனர். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் ஏசாயா இறைவாக்கினர் வழியாக கிறிஸ்துவின் மூலம் மீட்பு உண்டு என்று கூறுகின்றார். நீங்கள் என்னை விட்டு விலகி சென்றாலும் நான் உங்களை தேடி வந்து விடுவிப்பேன், பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று வாக்குறுதியளிக்கின்றார் (ஏசாயா 22:3). பாவம் என்பது அழிவின் குழி, சேறு நிறைந்த பள்ளம் என்றார் தாவீது (சங். 40:2). இருதயமே அனைத்து பாவங்களுக்கும் வேராயிருக்கிறது. அருள்நாதர் இயேசு பாவம் என்னும் இருளை அகற்றும் விடியலாக இருக்கிறார். ஏனெனில் அவர் மானுடரை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பவர் (மத். 1:21).


அகஸ்டஸ் சீசர் அரசன் ஆண்ட காலம் ரோம பேரரசின் பொற்காலம். அவர் பகைவர்களை ஒடுக்கினார். புதிய, புதிய நாடுகளை பிடித்தார் தன்னிடம் தஞ்சம் புகுந்தோருக்கு அடைக்கலம் கொடுத்தார். சிதறிக்கிடந்த நாடுகளை ஒன்றிணைத்தார், நாட்டில் அமைதியை நிலை நாட்டினார். துன்பத்திலே உழன்று தவித்த மக்களுக்கு, அடிமைத்தனத்திலே சிக்குண்ட மக்களுக்கு இது புதிய அனுபவமாகவே இருந்தது. மன்னன் வடிவில் இறைவன் இறங்கி வந்திருப்பதாகவே எண்ணினர். மன்னன் இறைவனின் வடிவம் என்ற நம்பிக்கை வலுப்பட்டது. ரோம ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்த யூதர்கள் மன்னர்களை ஒருபோதும் தங்கள் இறைவனாக ஏற்றுக் கொண்டதில்லை. கடவுள் நீதியை நிலை நாட்டி தங்களுக்கு விடுதலையருளுவார் என்று நம்பினர். விடுதலை தருகின்றவர் தாவீதின் வம்சத்தில் இருந்து மேசியாவாக வருவார் என்று நம்பினர். காலம் நிறைவேறிய போது இருளில் வாழ்ந்த ஜனங்கள் பேரொளியை கண்டார்கள். ஆம் நீதியின் சூரியனாம் மேசியா பிறந்தார் பாவம் என்னும் இருளை அகற்றும் ஒளியாய் வந்தார்.

கலா. 4:5-ல் பவுலடிகளார் இப்படி எழுதுகிறார். காலம் நிறைவேறிய போது கடவுள் தம்முடைய குமாரனை ஸ்திரீயினிடத்தில் பிறந்தவராகவும், நியாயப்பிரமாணத்திற்கு கீழ்பட்டவராகவும் அனுப்பினார்.

பாவத்தால் ஒளியற்று, ஒழுங்கற்றிருந்த வரலாற்றினை ஒளிரச் செய்ய கடவுள் திட்டமிட்டார். இதனை ஏசாயா இறைவாக்கினர் குறிப்பிடும் போது

“ஒரு குழந்தை நமக்கு பிறந்துள்ளார் அவர் அமைதியின் அரசர் என அழைக்கப்படுவார்” (ஏசாயா 9:6) என்றார். அமைதியின் அரசர் அனைத்துலக மக்களின் இருளை அகற்றும் ஆண்டவர். கடவுள் எளிய முறையில் குழந்தை வடிவில் மனிதராக பிறந்தது மானிட குலத்திற்கே மாபெரும் கொடையாக அமைந்துள்ளது. இது கடவுள் உலகின் மீது வைத்திருந்த அன்பை வெளிப்படுத்துகின்றது. அடிமைத்தனத்திலும், பாவத்திலும் வாழ்ந்த மக்களுக்கு வாழ்வழித்த ஒளியாம் இயேசு நம்மையும் ஒளிர செய்ய தேடி வருகின்றார்.

## 2. பாதை காட்டும் ஒளி....




வயல்வெளியில் மந்தைகளை காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர் முன் வீசிய ஒளி முதலில் அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. அதுவரை அப்படி ஓர் அனுபவத்தை அவர்கள் பெற்றதில்லை. உழைப்பாளிகள் முன் உன்னதத்தின் ஒளி வீசக்கூடும் என்று கதைகளில் கூட அவர்கள் கேட்டதில்லை. அஞ்சாதீர், என்ற இயேசு பிறப்பின் நற்செய்தி வாக்கியம் ஏனையோருக்கு கொடுக்கப்பட்டது போன்று இவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. மகிழ்ச்சியின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. மேய்ப்பர்கள் எளியவர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள், பாமரர்கள், எளிமையின் அடையாளமானவர்கள், வறுமைகோட்டிற்கு கீழ் வாழ்வபவர்கள், நாடோடிகள், சரியாக தங்கள் உடலை சுத்தம் செய்யாதவர்கள், நாற்றமுடையவர்கள் எனக் காரணம் காட்டி ஒதுக்கப்பட்டவர்கள். இவர்களுக்குதான் கிறிஸ்து பிறப்பு செய்தி முதலாவது சொல்லப்பட்டது. அவர்கள்தான் இயேசு என்னும் உன்னத ஒளியாம் மீட்பரை பார்த்து முழந்தாளிட்டு வணங்கும் பாக்கியத்தை பெற்றார்கள்.

**ஞானிகள்:** நன்கு கற்றவர்கள் அறிஞர்கள் கீழ் நாட்டிலுள்ள விண்கோள்களை பற்றி ஆராட்ச்சி செய்யும் வானியல் அறிஞர்கள் கனவுகளுக்கு விளக்கம் கொடுப்பதும், எதிர்காலத்தை முன்னறிவிப்பதும் அவர்களுடைய பணியாய் இருந்தது. வானத்தை ஆராய்ந்து பார்த்து நட்சத்திரங்களை கண்காணிப்பதிலும் அவைகளை பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் தங்களின் நாட்களை கழித்தனர். வானசாஸ்திரத்திலே அவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாயிருந்தார்கள். வானத்திலுள்ள நட்சத்திரங்கள் மனிதர்களுடைய வாழ்க்கையை பாதிக்கின்றன என்றும்,

வானத்திலுள்ள நட்சத்திரங்களை படித்தால் பூமியில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்பினார்கள். அவர்கள் கடவுளை தேடினவர்களாக இருக்க வேண்டும் ஆகையினால்தான் இயேசுவின் பிறப்பை குறித்த செய்தியை அறிந்து கொண்டார்கள். அவர்கள் இயேசு என்னும் மீட்பரை பார்க்க வால் சட்சத்திரம் ஒளியாக அவர்களுக்கு பாதை காட்டியது. பாதை மாறி சென்றவர்கள் மீண்டும் வானத்தில் நகர்ந்து சென்ற வால் நட்சத்திரத்தை பின் தொடர்ந்து மீட்பரை கண்டு பணிந்தனர். ஒளி பாதை காட்டியது.

### 3. பலன் தரும் ஒளி….

சகரியா தூய ஆவியால் நிரப்பப்பட்டு இயேசு கிறிஸ்துவின் வருகையை குறித்து இறைவாக்குரைத்தார். இந்த இறைவாக்கு சகரியாவின் பாடல் என அழைக்கப்படுகிறது. அந்நாட்களில் மக்களின் வாழ்வு கவலையும், துன்பமும், இருளும், நம்பிக்கையின்மையுமாய் இருந்தது. இச்சூழலில் மக்களுக்கு ஆறுதல் தரும் வண்ணமாக சகரியா இயேசு கிறிஸ்து மக்களை மீட்கும் அரசராக இருளிலும், இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளி தந்து நம்முடைய கால்களை அமைதியின் வழியில் நடக்க செய்வார் எனவும் கூறி இயேசு கிறிஸ்து கடவுளிடமிருந்து வெளிப்பட்ட விடியல் எனவும் வாக்குரைத்தார். இருள் மனிதனுக்கு அச்சத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துகிறது. இதனால் இருளை போக்க விளக்குகளை பயன்படுத்துவதுண்டு. இது உலகு சார்ந்தவை. பலன் தரும் ஒளியாகிய இயேசுவை வாழ்வில் அனுபவிக்கும் போது அமைதி, வெளிச்சம், மகிழ்ச்சி நம் வாழ்வில் பிறக்கிறது. உலகின் ஒளி நானே என்னை பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார், வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியை கொண்டிருப்பர் (யோவான் 8:12) என இயேசுவின் வார்த்தைகளில் பார்க்கிறோம். யோவான் 9:5-ல் நானே உலகின் ஒளி என்றார்.

யோவான் 12:46-ல் என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடிக்கு நான் ஒளியாக உலகிற்கு வந்தேன் என்றார்.

அன்பர்களே! ஒளி மிகவும் விரைவாக செல்லும் ஆற்றல் படைத்தது. ஒரு வினாடிக்கு 1,84,000 கி.மீ. வேகத்தில் விரைந்து செல்லும் வேகம் உடையது, இருளை அகற்றும் ஆற்றல் படைத்தது. ஒளியானது எப்பொருள் மீது விழுகிறதோ அப்பொருளை வெளிப்படுத்தும் தன்மையுடையது.

இறைவாக்கினர் ஏசாயா காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியை கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல்

சுடர் ஒளி உதித்துள்ளது என இறைவாக்குரைத்தார். இந்த இறைவாக்கானது மனுஉருவாகி இயேசுவில் நிறைவேறியது. உலகை சந்தித்த உன்னத ஒளியாம் இயேசுவை சந்திக்க ஆயத்தமாவோம்.

**அன்புடன் போதகர்,**

**Rev. S. போவாஸ்**

## சிறுவர் பகுதி

## கிறிஸ்மஸ் மரம்



காட்டு ஓரத்தில் கிறிஸ்மஸ் மரம் ஒன்று வளர்ந்து நின்றது. அது கிறிஸ்மஸ் சமயமாதலால் ஊரின் கண்ணாடி ஜன்னல்கள் வழியே அழகாக அலங்கரிக்கப்பட்டு ஜொலிக்கும் கிறிஸ்மஸ் மரங்களை அதால் பார்க்க முடிந்தது. அந்த மரத்திற்கு தானும் அதுபோல மின்னுவதற்கு மிகவும் ஆசை. ஒருநாள் நான்கு பையன்கள் வந்து அதை வெட்டத் துவங்கினர். அது தாங்கமுடியாத வேதனையளித்தாலும் அம்மரம் தன்னை அழகிய கிறிஸ்மஸ் மரமாக கற்பனை செய்து சகித்துக்கொண்டது.

அந்த பையன்கள் மரத்தை தங்கள் சைக்கிளில் கட்டி ஊருக்குள் கொண்டு சென்றனர். அதை வெளியே நட்டு அலங்கரிக்கத் துவங்கினர். அடுத்தநாள் கிறிஸ்மஸ். எல்லாப் பிள்ளைகளும் மரத்தைச் சுற்றி சுற்றி நடனமாடினர். மரத்திற்கு எல்லையில்லா மகிழ்ச்சி.

அடுத்தநாள் மரம் வாடத் தொடங்கியது. ஒரு மனிதன் வந்து அந்த மரத்தை எடுத்துக்கொண்டுபோய் ஒரு இருட்டறையில் வைத்து அறையை பூட்டிவிட்டு சென்றான். இருட்டு, புழுக்கம், மூச்சுத்திணறல், காட்டில் தான் அனுபவித்த தென்றலை நினைத்து மரம் அழுதது. ஒருவாரம் கழித்து இரண்டு மனிதர்கள் வந்து மரத்தை வெளியே கொண்டுபோய் விறகுகளாக வெட்டத் துவங்கினர். மரம் வலியால் துடித்தது. சில நாட்கள் விறகு வெயிலில் காய்ந்தது. பின்பு அடுப்பில் எரிந்தது.

வாழ்க்கையின் சில காரியங்கள் தூரத்திலிருந்து மினுமினுப்பாகத் தோன்றும். உலகத்தின் ஆபத்துக்களை அறிய உங்களுக்கு வயது போதாது. உங்களது பெற்றோர் மற்றும் பெரியவர்களின் ஞானத்தைச் சார்ந்து அவர்களது நடத்துதல்படி செல்வது நல்லது.

**அன்புடன் போதகர்**

# கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



பிரியாணி, கோழி, சாக்லேட் கேக் வாசனை தெரு வரை மிதந்து வந்தது. ஒரு பெரிய ஹாலில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்தது. மக்கள் நடனமாடிக்கொண்டும், விளையாடிக்கொண்டும், சாப்பிட்டுக் கொண்டுமிருந்தனர். ஒரு பிச்சைக்காரன் பசியோடு கண்ணாடி ஜன்னல் வழியே நடப்பவற்றைப் பார்த்து கொண்டிருந்தான். அப்போது வெண்ணுடை தரித்த ஒருவர் அங்கே வந்தார். அவர் பிச்சைக்காரனின் தோளைத் தொட்டு, “நீ உள்ளே போகவில்லையா?” என்று கேட்டார். ‘இல்லை ஐயா, நான் அழைக்கப்படவில்லை’ என்றான். பெரியவர் சொன்னார், “அது என்னுடைய பிறந்தநாள் கொண்டாட்டம்தான், நானே அழைக்கப்படவில்லை, கவலைப்படாதே” என்றார்.

இவ்வாண்டு கிறிஸ்மஸ் விருந்தை உங்களோடு அனுபவிக்க சில ஏழைகளை அழைக்கலாமே!

**அன்புடன் போதகர்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ எலிசபெத் ஃபிரை

## இயேசு இல்லையானால்....



மண்ணில் : 21-05-1780
விண்ணில் : 12-10-1845
ஊர் : நார்வீர்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இங்கிலாந்து

ஒரு வீட்டில் மூன்று குழந்தைகள். அவர்களுக்கிடையே கடுமையான விவாதம். தங்கள் வீட்டு செல்லக்கிளி இறந்துபோனால் அதை எங்கே புதைப்பது? வீட்டுக்கு முன்னால் என்றாள் பெரியவள். வீட்டுக்குப் பின்னால் என்றாள் இளையவள். ஊருக்குப் பொதுவான கல்லறையில் என்றாள் கடையவள்.

இவர்களின் வாக்குவாதம் முற்றியது. கூச்சலானது, குழப்பமானது, வாய்ச் சண்டையானது. பின்னர் கைச்சண்டையானது. அதுவும் முற்றிப்போய் கம்புச் சண்டையானது. மண்டை உடைந்தது.

தந்தை வந்தார். நடந்ததைக் கண்டு விழுந்து, விழுந்து சிரித்தார். அட பிள்ளைகளே, நாம் இன்னும் கிளியே வாங்கவில்லையே, வாங்கலாமா என்று பேசிக்கொண்டிருந்தோம். அதற்குள் நீங்கள் இப்படி சண்டைப்போட்டு உங்கள் மண்டையை உடைத்துவிட்டீர்களே என்றார்.

இன்று இயேசு கிறிஸ்து தங்கள் வாழ்க்கையில் இல்லாமல் பலர் தங்கள் மண்டைகளை உடைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். இவர்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்தால் எத்தனை சந்தோஷமாக இருக்கும். லண்டன் சிறையில் அடைபட்டு தங்கள் வாழ்க்கையில் நிம்மதியின்றி, எதிர்கால லட்சியமின்றி, உள்ளத்தில் இயேசு இன்றி வாழ்ந்த மக்களை தேடிப்போனார் எலிசபெத் ∴பிரை. அச்சிறைக்குள்ளே வேதாகம கூட்டங்களை நடத்தினார். பாவத்தில் ஊறிப்போன அம்மக்களை வேதாகமத்தின் சத்தியங்களில் இறுகக் கட்டினார். மனஸ்தாபப்பட்டு பலர் கண்ணீர்விட்டு, தங்கள் பாவங்களை அறிக்கை செய்தனர்.

1820-ம் ஆண்டு அது. ஒருநாள் இரவு வேளையில், சிறுபெண் ஒருத்தி தன் விட்டு வாசற்படியில் உயிர்போகும் தருவாயில் கிடந்ததைக் கண்டு, உள்ளத்தில் இறைவனின் புது திட்டத்தை உணர்ந்து, அக்குழந்தையை எடுத்து, அவர்களுக்காக ஆதரவற்ற குழந்தைகள் இரவு தங்குமிடங்களைக் கட்டினார். பள்ளிக்கூடங்களும், மருத்துவமனைகளும் இவரால் ஏற்படுத்தப்பட்டது. தாதியர் பயிற்சி பள்ளியும் இவரால் நடத்தப்பட்டு, அநேக ஆதரவற்ற நோயாளிகள் காப்பாற்றப்பட்டு, கிறிஸ்துவின் சத்தியத்தினால் அவர்கள் நிறைக்கப்பட்டனர். எலிசபெத் ∴பிரை இயேசுவின் திட்டத்தை நிறைவேற்றினார்.

அன்பரே! இயேசுவை அறியாதவர்களுக்கு நீங்கள் செய்யும் பணி என்ன?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** எல்லையற்ற உமது அன்பு என் உள்ளத்தில் குடிகொள்வதைவிட, எனக்கென்று இவ்வுலகில் எதையுமே விரும்பவில்லை – சார்லஸ் வெஸ்லி.

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! உம் அன்பைப் பெற்ற நான், உம் அன்பை அறியாதவருக்கும் அறிவிக்கப் புறப்படுகிறேன்.

**தியானத்திற்கு:-** யோபு 5, மீகா 1, எபிரெயர் 11

# துக்கம் பகிர்வோம்


## கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் **திரு. கண்ணன்** அவர்களின் புதல்வனும், முன்னாள் ஓய்வுநாள் பள்ளி மாணவனுமான **Master. Bebin Rufus** (வயது 17) நவம்பர் மாதம் 30-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் மகனை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ டிசம்பர் 2021

| | | |
|---|---|---|
| 03-12-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Golden Irene Sheeja Robin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Ramesh |
| 10-12-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Gracilin Melba Sujin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Robin Devadhas |
| 17-12-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Gracelin Rani Bensam |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Santhosh |
| 24-12-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Jenifba Jerin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Selvamoni |
| 25-12-2021 | முதலாம் திருமறைப்பகுதி | committee member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | committee member |
| 31-12-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Jeyarani Victor |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sheeju Johnson |
| 01-01-2022 | முதலாம் திருமறைப்பகுதி | committee member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | committee member |

# இருளை அகற்றும் இறைவன்




"என் சத்துருவே எனக்கு விரோதமாய் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்." (மீகா 7:8)

வீழ்ச்சியென்பது மனித இயல்புதான். ஆனால் எழுச்சியென்பது பற்றுறுதி வாழ்வின் சிறப்பியல்பு. தூய ஆவியரில் ஆரம்பித்து, வாழ்வாகிய ஓட்டத்தில் சறுக்கல்களுக்கு உள்ளாகி, கூனிக்குறுகி முடமாகிப் போனோர்தான் ஏராளம். இதுவும் ஒருவகை வீழ்ச்சிதான். ஆனால் அவைகள் நிரந்தரமான வீழ்ச்சிகளல்ல. ஏனெனில் இறைமக்கள் தமது வாழ்வை கடவுளின் கரங்களில் ஒப்படைத்துள்ளதால், வீழ்ச்சிகளுக்காய் மனம் வருந்துகின்றனர். சிருஷ்டிகரும், புதுப்பிப்பவருமாகிய கடவுள் அவற்றைப் புதுமையின் பாதையில் திருப்புகின்றார்.

"வீழ்ந்தாலும் எழுந்திருப்பேன்" என்பது ஒரு சவால். தவறுக்காய் தண்டனையடைந்தாலும், அது தவறின் விளைவு என்பதை அறிந்தவருக்கு அதன் பின்பு ஒரு நல்ல வாழ்வை எதிர்பார்க்க வாய்ப்பு உண்டு.

ஒரு மனிதன் தன்னிடம் நன்கு எரிகின்ற ஒரு விளக்கோடு எங்கெல்லாம் செல்கின்றானோ, அங்கெல்லாம் இருள் அகன்று வெளிச்சம் தோன்றும். அவ்விதமாகவே நம்முடன் கடவுள் இருந்தால் நாம் எங்கிருந்தாலும் அந்த இடம் ஆசீர்வாதமாகவும், வெளிச்சமாகவும் இருக்கும்.

அடிமைகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் அமெரிக்காவில் பரவியிருந்த நாட்களில், பண்ணை ஒன்றில் எஜமான் ஒருவர் தன் அடிமையைக் கூட்டிக்கொண்டு பறவை வேட்டைக்குச் சென்றார். எஜமான் கடவுள் நம்பிக்கையற்றவர். அந்த அடிமையானவன் ஆழ்ந்த பக்தியுள்ள கிறிஸ்தவன். வழியில் அவர்கள் சென்ற வண்டியின் அச்சாணி கழன்று விட்டது. அதைச் சரி செய்ய எஜமான் அடிமையிடம் கூறினார். உடனே அவன் சுத்தியலைக்கொண்டு அடிக்கும்போது அது தவறுதலாக அவன் கைவிரலைப் பதம் பார்த்தது. ஐயோ! என்று அலறியவன் வாயிலிருந்து தகாத வார்த்தை ஒன்றும் வந்தது. ஆனால் உடனே அவன் கடவுளிடம்

மன்றாடி மன்னிப்புக்கேட்டான். எஜமான் அவனிடம் "ஒரு கிறிஸ்தவனான நீ ஏன் வாழ்க்கையை ஒரு போராட்டமாய் ஆக்கிக் கொள்கிறாய்? என்னைப் பார், கடவுள் நம்பிக்கையற்ற நான் அமைதியாய் வாழ முடிகிறது" என்று கூறினார். அடிமையானவன் உடனடியாக பதில் ஏதும் சொல்லவில்லை. அப்போது சில பறவைகள் மேலே பறந்தன. எஜமான் துப்பாக்கியை எடுத்து பறவைகளை நோக்கி இரண்டு, மூன்று குண்டுகளைச் சுட்டார். இரண்டு பறவைகள் கீழே விழுந்தன. எஜமான் அவனிடம் இறந்து போன பறவையை விட்டுவிட்டு, காயப்பட்டும் பறக்க முயற்சித்த பறவையை எடுத்து வரக்கூறினார். "நானும் அந்த காயப்பட்ட பறவையைப் போல் இருக்கிறேன். சத்துரு என்னைத் துரத்தி வருகிறான். நான் உயிரோடு இருப்பதால் அவனிடமிருந்து தப்பும்படி போராடுகிறேன். ஆனால், நீங்களோ இறந்து போன அந்த பறவையைப் போலிருக்கிறீர்கள்" என்று கூறினான். நம் வாழ்வியலின் இருளை இறைவனே அகற்ற முடியும்.

**- V.G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி

### நவம்பர் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. விசுவாசத்தினால் வராதது – ரோமர் 14:23
2. இடறுதற்கான கல், தவறுதற்கான கன்மலை – ரோமர் 9:33
3. மரியாள் - ரோமர் 16:6
4. புறஜாதியார் - ரோமர் 11:13-17
5. ரோமர் - ரோமர் 13:9
6. மோசே – ரோமர் 9:15
7. இல்லிரிக்கம் - ரோமர் 15:19
8. இஸ்ரவேலர் - ரோமர் 10:3
9. முதலாளி – ரோமர் 12:8
10. அதிகாரங்கள் - ரோமர் 13:1
11. சாராள் - ரோமர் 9:9
12. நர்கீசுவின் வீட்டார் - ரோமர் 16:11

13. கனம்பண்ணுகிறதில் - ரோமர் 12:10

14. புசிப்பும், குடிப்பும் - ரோமர் 14:17

15. பவுல் - ரோமர் 11:1

16. இரட்சிப்பு – ரோமர் 13:11

17. தேவ வசனத்தினாலே – ரோமர் 10:17

18. ஏழாயிரம் - ரோமர் 11:4

19. அன்பு – ரோமர் 13:10

20. எல்லா மனுஷரோடும் - ரோமர் 12:18

## நவம்பர் மாத போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Leela Gladson |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jeya Rani Victor | |

# ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி

## நவம்பர் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. விதவைகள் - எரேமியா 15:8

2. பாபிலோன் ராஜா – எரேமியா 20:4

3. விக்கிரகங்களுக்கு – எரேமியா 18:15

4. பூமி – எரேமியா 23:5

5. அக்கினிபோலவும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலவும் உள்ளது – எரேமியா 23:29

6. கழுதையைப்போல் - எரேமியா 22:19

7. தோப்பேத்திலே – எரேமியா 19:11

8. யூதாவின் பாவம் - எரேமியா 17:1

9. புழுதியில் - எரேமியா 17:13

10. இஸ்ரவேல் வீட்டார் - எரேமியா 18:6

11. கோனியா – எரேமியா 22:24

12. இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கு – எரேமியா 19:2
13. தாவீதுக்கு – எரேமியா 23:5
14. பரிசுத்த ஸ்தானம் - எரேமியா 17:12
15. எருசலேமின் வாசல்கள் - எரேமியா 17:27
16. பலவந்தரின் - எரேமியா 15:21
17. பட்டயம், நாய்கள், ஆகாயத்துப் பறவைகள், பூமியின் மிருகங்கள் - எரேமியா 15:3
18. கவுதாரி – எரேமியா 17:11
19. எட்டி – எரேமியா 23:15
20. மேய்ப்பர்கள் - எரேமியா 23:1

## நவம்பர் மாத போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Johan Pratheep |
| Mr. Anu R. | Mr. Lenin Raj |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Mr. Sujith Gladson |

*May God Bless All*

## Birthday Celebrants – December 2021

| | |
|---|---|
| 01st December | Mrs. Regin Justa, W/o Mr. Vinolin Vetha Kumar |
| 03rd December | Mr. Satheesh Kumar |
| 04th December | Mr. Ramji |
| 05th December | Mr. Sylas |
| 05th December | Miss. N. Renisha, D/o Mr. Nethaji |
| 05th December | Mrs. Borish Shiny, W/o Mr. Rejicilin |
| 06th December | Miss. Febin D. Melbina, D/o Mr. Devaraj |
| 10th December | Mrs. Percy, W/o Mr. Jean C. R. Shibin |
| 12th December | Master. J. S. Jayden Shano, S/o Mr. Jino Retnakumar |
| 13th December | Mr. Jose Chandra Bose |
| 13th December | Mr. Austin Daniel Raj |

| | |
|---|---|
| 14th December | Mrs. Thamari, W/o Mr. Johnson Raj |
| 15th December | Master. Joshua, S/o Mr. Kingsly Paul |
| 18th December | Mr. N. A. Srinivas |
| 18th December | Master. Davin Juanito, S/o Mr. Rejicilin |
| 18th December | Mrs. Hema, W/o Mr. Winson |
| 20th December | Miss. Amiga Eliz Augustin, D/o Mr. S.Augustin |
| 20th December | Miss. Winshiya, D/o Mr. Winson |
| 21st December | Mrs. Mary Praveena, W/o Gobinath |
| 21st December | Mrs. Nirmala, W/o Mr. Pusupakaran |
| 21st December | Miss. A. S. Afina Sha, D/o Mr. Ajin |
| 29th December | Miss. Ansina Yelen Augustin, D/o Mr. S. Augustin |
| 29th December | Mr. Mohan Babu |
| 29th December | Mr. Anlin Justin |
| 29th December | Master. Prince Jotham, S/o Mr. Johan Pratheep |
| 31st December | Mr. Ahigen Paul |
| 31st December | Mrs. Ancy, W/o Mr. Austin Daniel Raj |

## Wedding Day Anniversaries – December 2021

| | |
|---|---|
| 04th December | Mr. M. Sylas & Mrs. Delphin Mary |
| 15th December | Mr. Srinivas & Mrs. Cynthiya |
| 19th December | Mr. Gnana Ruban & Mrs. Maria Tracy |
| 19th December | Mr. Jebastin & Mrs. Sabitha |
| 21st December | Mr. Bejo Nelson & Mrs. Aspin Mercilent Ethel |
| 26th December | Mr. Pratheesh & Mrs. Binita |
| 26th December | Mr. Lenin & Mrs. Jenshy |
| 27th December | Mr. Herbert Goldston & Mrs. Kiruba |
| 27th December | Mr. Vimal Kumar Stephen & Mrs. Esther |
| 28th December | Mr. Deva Raj & Mrs. Vijaya Kumari |
| 28th December | Mr. Jenkin Raj & Mrs. Mahizha |
| 28th December | Mr. Anto Kingston & Mrs. Josephin Jeba Sharmy |

| | |
|---|---|
| 28th December | Mr. Jerry Jones & Mrs. Monisha |
| 28th December | Mr. Raja Singh & Mrs. Sarah |
| 29th December | Mr. V. N. Rajan & Mrs. Nisha |
| 29th December | Mr. Dhinakaran & Mrs. Jenelia |
| 29th December | Mr. Rejicilin & Mrs. Borish Shiny |
| 30th December | Mr. Jude Dennis Samuel & Mrs. Rubina Grace |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.
5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு மத சார்பின்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.
2. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.
3. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.
4. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.
2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.
3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# அனுதின மன்னா – டிசம்பர் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஒராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஒராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| டிசம்பர் 1 | புதன் | எசே. 34:24-31 | எசே. 34:26 | 2கொரி. 7-9 |
| டிசம்பர் 2 | வியாழன் | 1நாளா. 17:16-27 | 1நாளா. 17:27 | 2கொரி. 10-11 |
| **டிசம்பர் 3** | **வெள்ளி** | **2கொரி. 12:1-10** | **2கொரி.12:9(a)** | **2கொரி. 12-13** |
| டிசம்பர் 4 | சனி | ஆதி. 12:1-8 | ஆதி. 12:2 | கலா. 1-2 |
| டிசம்பர் 5 | ஞாயிறு | எசேக். 34:24-31 | எசேக். 34:26 | கலா. 3-4 |
| டிசம்பர் 6 | திங்கள் | 1நாளா. 17:16-27 | 1நாளா. 17:27 | கலா. 5-6 |
| டிசம்பர் 7 | செவ்வாய் | சங். 115:1-18 | சங். 115:12 | எபேசியர் 1-2 |
| டிசம்பர் 8 | புதன் | எபேசி. 1:3-14 | எபேசி. 1:3 | எபேசியர் 3-4 |
| டிசம்பர் 9 | வியாழன் | 2சாமு. 22:32-44 | 2சாமு. 22:33 | எபேசியர் 5-6 |
| **டிசம்பர் 10** | **வெள்ளி** | **சகரியா 9:11-17** | **சகரியா 9:12** | **பிலிப்பியர் 1-4** |
| டிசம்பர் 11 | சனி | சங். 28:1-9 | சங். 28:7 | கொலோ. 1-4 |
| டிசம்பர் 12 | ஞாயிறு | சங். 91:1-16 | சங். 91:4 | 1தெச. 1-3 |
| டிசம்பர் 13 | திங்கள் | சங். 31:1-11 | சங். 31:3 | 1தெச. 4-5 |
| டிசம்பர் 14 | செவ்வாய் | சங். 81:1-16 | சங். 81:16 | 2தெச. 1-3 |
| டிசம்பர் 15 | புதன் | உபா. 33:17-29 | உபா.33:27(a) | 1தீமோ. 1-6 |
| டிசம்பர் 16 | வியாழன் | நீதி. 14:16-27 | நீதி. 14:26 | 1தீமோ. 1-4 |
| **டிசம்பர் 17** | **வெள்ளி** | **ஏசா. 49:8-16** | **ஏசா. 49:15** | **தீத்து, பிலமோன்** |
| டிசம்பர் 18 | சனி | எரே. 31:1-7 | எரே. 31:3(b) | எபிரெயர் 1-4 |
| டிசம்பர் 19 | ஞாயிறு | யாத். 33:12-23 | யாத். 33:17(b) | எபிரெயர் 5-7 |
| டிசம்பர் 20 | திங்கள் | சங். 32:1-10 | சங். 32:10(b) | எபிரெயர் 8-10 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| டிசம்பர் 21 | செவ்வாய் | யோவா. 16:20-33 | யோவா. 16:33 | எபிரெயர் 11-13 |
| டிசம்பர் 22 | புதன் | வெளி 3:14-22 | வெளி 3:20 | யாக்கோபு 1-5 |
| டிசம்பர் 23 | வியாழன் | சங். 34:1-10 | சங். 34:10 | 1பேதுரு 1-5 |
| **டிசம்பர் 24** | **வெள்ளி** | **1கொரி. 13:1-13** | **1கொரி. 13:10** | **2பேதுரு 1-3** |
| டிசம்பர் 25 | சனி | ஆதி. 28:10-32 | ஆதி. 28:15 | 1யோவான் 1-5 |
| டிசம்பர் 26 | ஞாயிறு | சங். 27:1-14 | சங். 27:5 | 2யோவான் |
| டிசம்பர் 27 | திங்கள் | 1பேதுரு 2:1-10 | 1பேதுரு 2:3 | 3யோவான் |
| டிசம்பர் 28 | செவ்வாய் | பிலிப். 4:1-13 | பிலிப். 4:6 | யூதா |
| டிசம்பர் 29 | புதன் | ஏசா. 30:19-26 | ஏசா. 30:23 | வெளி. 1-3 |
| டிசம்பர் 30 | வியாழன் | ஏசா. 54:1-17 | ஏசா. 54:17 | வெளி. 4-7 |
| **டிசம்பர் 31** | **வெள்ளி** | **உபா. 28:1-13** | **உபா. 28:7** | **நன்றி ஜெபம்** |
| ஜனவரி 1 | சனி | பிலிப். 4:1-9 | பிலிப். 4:7 | ஆதி 1-3 |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

**வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!**

***Happy Christmas to you all***



# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. S. Bovas**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**